பிஸ்மில்லாஹ் அல்ஹம்துலில்லாஹ் வஸ்ஸலாத்து வஸ்ஸலாமு

அலா ரஸூலில்லாஹ் வஆலிஹீ வஅஸ்ஹாபிஹீ ஹிஸ்பில்லாஹ்

# கருணை நபி அவர்களுக்கு கவிதை தெரியுமா?

وما علمناه الشعر وما ينبغي له ان هو الا ذكر وقرآن مبين

(நமது தூதராகிய) அவருக்கு நாம் கவிதை கூற கற்றுக்கொடுக்கவில்லை அது அவருக்குத் தகுமானதுமல்ல. இது தெளிவான குர்ஆனும் நல்லுபதேசமுமாகும். *(அல்குர்ஆன் 36:69)*

**திரு நபி அவர்களுக்கு இறங்கிய திருக்குர்ஆனை மக்கா காஃபிர்கள் கவிதை என்றும் திரு நபி அவர்களை கவிஞர் என்றும் கூறினார்கள்.**

بل افتراه بل هو شاعر

**இவர் இந்தக் குர்ஆனை தாமே பொய்யாக கற்பனை செய்து கொண்டார். இவர் ஒரு கவிஞர்தான் என்றும் கூறினார்கள்.** *(அல்குர்ஆன் 21:5)*

ويقولون ائنا لتاركوا آلهتنا لشاعر مجنون

என்னே நாங்கள் ஒரு பைத்தியக்கார கவிஞருக்காக எங்கள் தெய்வங்களை நிச்சயமாக விட்டுவிடுவோமா? என்றும் அவர்கள் கூறுகின்றனர்

*(அல்குர்ஆன் 37:36 )*

மக்காவின் மக்கள் நபிகள் நாயகம் அவர்களுக்கு இறங்கிய இறை வேதத்தை- இது இறைவனின் வஹீ அல்ல. இறைவனுடையதல்ல வெறும் கற்பனைக்கவிதைகளின் தொகுப்பாகும் என்று சொன்னார்கள். அப்பொழுதுதான் எல்லாம் வல்ல அல்லாஹ் மேலே கூறப்பட்ட அவருக்கு நாம் கவிதை கூற கற்றுத்தரவில்லை எனும் ஆயத்தை இறக்கினான்.

பொதுவாக அரபிகள், இதயத்தை ஈர்க்கவல்ல கற்பனை நாவல்களுக்கும்- கற்பனை கவிதைகளுக்கும் (ஷிஃர்) கவிதை என்று சொல்வார்கள். அதற்கு எவ்வித அறிவார்ந்த அர்த்தமும் இருக்காது. ஆழமான கருத்துமிராது. ஆனால் வார்த்தை ஜாலம் மட்டும் இருக்கும். அந்த அடிப்படையில் திருக்குர்ஆனை இது ஒரு கற்பனைக் கவிதை என்று மக்கத்துக் குஃப்பார்கள் கூறினர்.

*நூல் ஜமல் பாகம் 7 பக்கம் 429 அதனடிப்படையில்*

முதலாக அல்குர்ஆனுடைய நபி அவர்களுக்கு நான் கற்பனை நாவலோ

கற்பனைக் கவிதைகளையோ கற்றுக்கொடுக்கவில்லை. மாறாக இது நல்லுபதேசமும் குர்ஆனுமாகும் என்று மேல் ஆயத்தில் சொல்கிறான்.

இந்த ஆயத்தை வைத்துக் கொண்டு நபிகள் நாயகம் அவர்களுக்கு நாவல் பற்றியோ அல்லது கவிதை பற்றியோ எந்த ஞானமும் கிடையாது என்று சொல்லலாகாது.

ஒருவர் தனது மகனுக்கு ஏசுவது , திட்டுவது போன்றவற்றை நான் கற்றுத் தரவில்லை என்று சொல்கிறார் என்று வைத்துக்கொள்வோம். அவர் அப்படிச் சொன்னதால் அந்த மகனுக்கு ஏசல், திட்டல் போன்ற துறையின் ஞானமே இல்லை என்று பொருள் கிடையாது. அதுபோல் இங்கும் நாம் விளங்கவேண்டும்.

நபிமார்கள் திருடுவதில்லை , திருடவுமாட்டார்கள். ஆனால் திருட்டு என்றால் என்னவென்பது அவர்களுக்குத் தெரியும் அதனால்தான் ஹஜ்ரத் அழகர் யூசுஃப் அவர்கள் தனது தம்பி ஹஜ்ரத் புன்யாமீன் அவர்களுடைய சுமையில் பொற்குவளையை வைத்து, திருட்டு போல் பாவனை செய்து மடக்கி தன்னுடன் தம்பியை அமர வைத்துக்கொண்டார்கள். (அல்குர்ஆன் 12:70) அதுபோல் கவிதையைப் பற்றிய அறிவு இருப்பது நபிமார்களின் உயர் தகுதிக்கு விரோதமானதல்ல. கவித்துறைக்கல்வி நபிமார்களுக்கு இருக்கக்கூடாது, என்பது இஸ்லாமிய சட்டமுமல்ல. ஆனால் கற்பனைக் கவிதைகளை மக்களிடம் போதனை செய்வது நபிமார்களுக்கு தகுமானதல்ல. இதுவே முதலில் குறிப்பிட்ட வசனத்தின் கருத்தாகும்.

اَنَا النَّبِيُّ لاكَذِبْ اَنَا ابْنُ عَبْدِ الْمُطَّلِبْ

<u>அனன் நபிய்யு லாகதிப் அனப்னு அப்தில் முகத்தலிப்.</u> நான் ஒரு நபி இது பொய்யன்று நான் அப்துல் முத்தலிபின் மகன், என்று நபி அவர்கள் ஹுனைன் யுத்தகளத்தில் கவிதையைப்போல அடுக்கு மொழியில் கூறினார்கள்.

*(நூல் புகாரி வால் 1 பக்கம் 401,410,427 குஹுனைல் பயான்) வால்7 பக்கம் 429)*

عن جندب ابن سفيان ان رسول الله صلى الله عليه وسلم كان

في بعض المشاهد وقد دميت اصبعه فقال (هل

انت إلا اصبع دميت وفي سبيل الله ما لقيت

رواه البخاری ج ١ ص393

கத்தி எடுத்து ரத்தம் சிந்தும் யுத்தகளமொன்றில் கருணை நபி அவர்களின் விரல் காயப்பட்டது. அப்போது காயம்பட்ட விரலே கவலை விடுக ! உனக்கு எற்பட்ட இன்னல் இறைபாதையில் என்றறிக ! என்று (கவிதையாக) கூறினார்கள்.

*அறிவிப்பு- ஹழ்ரத் ஜுன்துப் (ரலி) நூல் புகாரி வால் 1 பக்கம் 393 தஃப்ஸீர்காஜின். வால் 4 பக்கம் 12 ரூஹுல் பயான் வால் 7 பக் 429)*

ஹிஜ்ரி 4ம் ஆண்டு ஷவ்வால்மாதம் குறைஷிகள், யூதர்கள், , கத்ஃபான்கள் என்று பல்வேறு எதிகளும் இணைந்து 10,000பேர் கொண்ட பெரும் எடுப்பிலான எண்ணிக்கையில் அலைஅலையாக வந்து மதீனாவை தாக்கித்தகர்க்கத் திட்டமிட்டனர். தகவலறிந்த தாஹா நபி அவர்கள் பாரசீக நாட்டைச்சார்ந்த தோழர் ஹழ்ரத் ஸல்மான் ஃபார்ஸீ(ரலியல்லாஹு அன்ஹு) அவர்களின் ஆலோசனைப்படி மதீனா நகரைச் சுற்றி, எதிரிகளின் ஊடுருவலை தடுக்க ஆழமான அகழ் தோண்டினர். எதிர்ப்படை வந்து நகருக்கு வெளியே சுமார் 20 நாட்கள் முற்றுகையிட்டது. போர்நடக்கவில்லை. அம்பெறிதல், கல்லெறிதல் மட்டும் நடந்தன. இறுதியில் எதுவும் செய்யமுடியாமல் எதிரிகள் திரும்பினர்.

இதற்கு அகழ்ப்போர் என்றும்-பலப்பிரிவு பகைவர்களும் ஒருமித்துத்தாக்க வந்ததால் அஹ்ஸாப் (பல அணியினர்) என்றும் வரலாற்றில் சொல்லப்படுகிறது.இந்தப்போர் நடப்பதற்கு முன்னர் முஹாஜிர்களும் அன்ஸாரிகளும் அகழ் தோண்டி தம் முதுகில் மண் சுமந்தபோது

نَحْنُ الَّذِيْنَ بَايَعُوْا مُحَمَّدَا ★ عَلَى الْاِسْلَامِ مَا بَقِيْنَا اَبَدَا

நாங்கள் வாழும் காலமெல்லாம் இஸ்லாத்தில் நீடித்திருப்போம் என்று முஹம்மது (ஸல்) அவர்களிடம் உறுதி மொழி வழங்கியுள்ளோம் . என்று (பாடியபடி) ஸஹாபிகள் கூறினார்கள். அவர்களுக்கு பதில் தரும்முகமாக நபி அவர்கள் இறைவா

اَللّٰهُمَّ لَا خَيْرَ اِلَّا خَيْرُ الْاٰخِرَةْ • فَبَارِكْ فِى الْاَنْصَارِ وَالْمُهَاجِرَةْ

மறுமையின் நன்மையைத்தவிர வேறு நன்மை எதுமில்லை எனவே அன்ஸாரிகளுக்கும் முஹாஜிர்களுக்கும் நீ அருள் புரிவாயாக என்று (பாடலிலேயே) எதுகை மோனையுடன்) கூறினார்கள்.

*அறிவிப்பு ஹழ்ரத் அனஸ் (ரலி) நூல் புகாரி வால் 2 பக் 588.*

*புகாரி தமிழ் வால் 4 பக் 697 வால் - 3 பக், 484 (ஹதீஸ் நம்பர்2835)*

இதுபோல் கன்தக் (அகழ்) போரில் நபிகள் நாயகம் அவர்கள் நவின்ற மற்றோர் வாசகம் باسم الاله وبه بدأنا ولو عبدنا غيره شقينا அல்லாஹ்வின் திருப்பெயராலும் அவனின் ஆற்றலாலும் நாம் வெளிப்பட்டோம். அவனல்லாததை நாம் வணங்கின் துற்பாக்கியராவோம்,, என்று (பாடல் வரியாக) கூறினார்கள்.

*நூல் - ரூஹுல் பயான் வால் 7பக் 429.*

ஆனால் மேற்கூறப்பட்ட 4 கவிதைகளை நபி நாயகம் அவர்கள் திட்டமிட்டுஇயற்றவில்லை இவை யதார்த்தமாக கவிதையின் நாட்டமோ திட்டமோ இல்லாமல் தம் குமுதவாய் திறந்து கூறினார்கள். எனவே நாயகம் அவர்களை கவிஞர் என்றோ புலவர்என்றோ சொல்லமுடியாது. திருக்குர்ஆன் கவிதையுமல்ல. திருநபி அவர்கள் தன்னை لست بشاعر ولا ينبغي لي நான் கவிஞனல்லன். எனக்கு அது அவசியமுமல்ல என்று கூறியிருக்கிறார்கள்.

*நூல் - தஃப்ஸீர் காஜின் வால் 4 பக் 12*

وادعي بعض الادباء انه عليه السلام كان يحسن الشعر لكنه كان لا يتعطاه

நபிகள் அவர்களுக்கு கவிதை இயற்ற நன்றாகத் தெரியும். இருப்பினும் அதை இயற்ற அவர்கள் நாடுவதில்லை என்று சில அறிஞர்கள் வாதிடுவதாக *ரூஹுல் பயானில் (வால் 7 பக் 431)* குறிப்பிட்டுகிறார்கள்.

وفي التهذيب للبغوى من امحتا قيل كان عليه السلام يحسن الشعر ولا يقوله

நபிநாயகம் (ஸல்) அவர்களுக்கு கவிதை நன்கு தெரியும் என்று கூறப்படும் கருத்தை இமாம் பகவீ (ரஹ்) அவர்கள் தனது தஹ்தீப் எனும் நூலில் குறிப்பிட்டிருப்பதை *ரூஹுல் பயான் 7 வது வால்யூம் 431 வது பக்கம்* சுட்டிக்காட்டுகிறது. (இமாம் பகவீ அவர்கள்களின் பெயர் ஹுஸைன் ஆகும் ஆப்கானிஸ்தான் எல்லையிலுள்ள கிழக்கு ஈரானில் குராஸான் மாநிலத்தில் பிறந்த இவர்கள் ஹதீஸ்கலை வல்லுனரும் - ஷாஃபி மத்ஹபின் சட்டமேதையுமாவார்கள். مصابيح السنة மஸாபீஹுஸ் ஸின்னா இவர்கள்

எழுதிய புகழ் பெற்ற நூலாகும். இவர்களின் காலம் ஹிஜ்ரி 5ம் நூற்றாண்டு ஆகும். நபிமார்கள் பொய்பேசமாட்டார்கள் ஆனால் பொய் என்றால் என்னவென்றறிவர். நபிநாயகம் அவர்கள் கவிஞர் அல்ல. ஆனால் கவிதை பற்றிய கல்விஞானம் அவர்களுக்கு உண்டு. *நூல் தஃப்ஸீர் நூருல் இர்ஃபான் பக் 710 , 714 ஆசிரியர் யகீமுல் உம்மத் அல்லாமா அஹ்மத்யார்கான் (ரஹ்)*

وعلمك مـــالم تكـــن تعلـــم (القران)

(நபியே) நீங்கள் அறியாத அனைத்தையும் உங்களுக்கு அவன் கற்றுத் தந்தான் (அல்குர்ஆன் 4 :113)

அல்லாஹ்வும் அவன் ரஸூலும் மிக அறிந்தவர்கள்.

<u>பின்குறிப்பு</u> :

ஸஹாபிகளில் ஹஜ்ரத் அபூபக்கர் (ரலி) ஹஜ்ரத் உமர் (ரலி) ஹஜ்ரத் அப்துல்லாஹ் இப்னு ரவாஹா (ரலி) ஹஜ்ரத் ஹஸ்ஸான் இப்னு ஸாபித் (ரலி) ஹஸ்ரத் ஆமிர் இப்னு அக்வஃ (ரலி) ஹஜ்ரத் கஃப் இப்னு மாலிக் (ரலி) ஹஜ்ரத் கஃபு இப்னு ஜுஹைர் (ரலி) போன்றோர் கவிஞர்களாக இருந்தனர்.

وكان علـــي رضـــى لله عنـــه اشـــعر الخلفـــاء وكانـــت عائشـــة رضـــى الله عنها ابلغ مـــن الكـــل (روح البيـــان)

ஹஜ்ரத் அலி (ரலி) அவர்கள் கலீஃபாக்களில் மிகச்சிறந்த கவிஞராகவும்- ஹஜ்ரத் ஆயிஷா (ரலி அனைவரையும் விட கவித்துறை மேதையாக இருந்தனர்

*நூல் ரூஹுல்பயான் வால் 4 பக் 317*

ஹஜ்ரத் ஹஸ்ஸான் இப்னு ஸாபித் (ரலி) அவர்களுக்கு நபி அவர்கள், தன்னை புகழவும் எதிரிகளை இகழவும் மஸ்ஜிதுன் நபவியில் மேடை போட்டுக் கொடுத்தார்கள். நூல் அபூதாவூத் ஹதீஸ் எண் 4361 மற்றும் ரூஹுல் பயான் வால் 7 பக் 431 மற்றும் திர்மிதீ ஹதீஸ் எண் 2773 அறிவிப்பு அன்னை ஆயிஷா (ரலி-ஹா)

மேலும், ஹஜ்ரத் ஹஸ்ஸான் (ரலி) அவர்கள் பள்ளிவாசலில் வைத்து கவிதை பாடுவார்கள். என்ற ஹதீஸ் கீழ்காணும் கிதாப்களில் காண முடியும்.

*நூல்கள் : புகாரீ முஸ்லிம், ஹதீஸ் எண் : 4539, நஸாயீ,*
*ஹதீஸ் எண் : 709 அஹ்மத், ஹதீஸ் எண் : 20926.*

(எனவே பள்ளியில் மௌலிது ஓதுவது ஹராமாகும்) ஒருமுறை இப்லீஸ், அல்லாஹ்விடம் தனக்கும் ஒரு குர்ஆனைக் கொடுக்குமாறு கேட்டபோது கெட்ட கவிதைதான் உன்னுடைய குர்ஆன் என்று இறைவன் பதில் சொன்னான். *நூல் : ரூஹுல்பயான், வால் - 7, பக் - 430.*

தீய சினிமா கவிதைகளை ஒதுக்கிவைப்போம். தூதர் புகழ்பாடும் கவிதைகளை தூக்கி நிறுத்துவோம்.



# ஈச்ச மரத்தின் இன்பச் சோலையில்...

அண்ணல் எம்பிரான் முஹம்மது (ஸல்) அவர்கள் - ஹிஜ்ரத் செய்து மதீனத்துல் முனவ்வரா வந்தபோது மதீனாவாசிகள் ஈச்சமரத்தின் ஆண் பாளையையும் பெண் பாளையையும் இணைத்து விட்டதை நபிகள் நாயகம் அவர்கள் என்ன செய்கிறீர்கள்?என்று கேட்டார்கள். அதற்கு மதீனாவாசிகள் நாங்கள் எப்போதும்இப்படிச் செய்வதுண்டு என்று சொன்னார்கள்.

அதற்கு நபி (ஸல்) அவர்கள் நீங்கள் இவ்வாறு செய்யாவிட்டால் அது நன்றாக இருக்கக்கூடும், என்று சொன்னார்கள். உடனே பேரீத்தம் பாளையை இணைப்பதை ஸஹாபிகள் விட்டுவிட்டார்கள்.

அந்த ஆண்டு ஈத்தம்பழம் குறைந்து விட்டது. ஸஹாபிகள் இந்த விஷயத்தை ரசூல் அவர்களிடம் எடுத்துச் சென்றார்கள். அதற்கு நபி அவர்கள் நான் எதாவது உங்களுக்கு உத்தரவிட்டால் அதைப் பற்றி பிடியுங்கள். நான் எனது அபிப்பிராயத்திலிருந்து உங்களுக்கு உத்தரவிட்டால் நானோ ஒரு மனிதன்தான் என்று பதில் சொன்னார்கள். *நூல் முஸ்லிம்*

*மிஷ்காத் பக்கம் 27 - 28*

*அறிவிப்பு ராஃபிஉ இப்னு கதீஜ் (ரலி)*

**<u>விளக்கம் :</u>**

அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் அபிப்பிராயமும் பரக்கத்திற்குரியதுதான் இந்த விஷயத்தில் அவ்வாறு ஸஹாபிகள் அவசரப்பட்டுவிட்டார்கள். ஈச்ச மரச் சோலையின் பழங்களின் உற்பத்தி குறைவை அந்த ஸஹாபிகள் தவக்குலுடன் சிறிது காலம் பொறுமை காட்டியிருந்தால் பழ உற்பத்தியில் மிகப் பெரும் பரக்கத்தை பெற்றிருப்பார்கள். ஏனெனில் முத்து நபியின் முபாரக்கான அபிப்பிராயம் பரக்கத்தையே கொடுக்கும். عِلْمُ الأَوَّلِينَ وَالآخِرِينَ முன்னோர் பின்னோர் அனைவரின் அறிவும் வழங்கப்பட்ட அண்ணல் பெருமானார் அவர்களுக்கு அனைத்து வகை விவசாய அறிவும் நிச்சயமாக தெரியும்.

ஹஜ்ரத் யூசுஃப் அவர்கள் எந்தவொரு விவசாயமும் செய்யவில்லை. இருப்பினும் சிறைச் சாலைக்குள்ளிருந்தே விவசாயம் குறித்து மிஸ்ர் நாட்டு மன்னரிடம் விரிவான விளக்கம் கொடு த்தார்கள். இதை அல்லாஹ் குர்ஆனில் கூறுகிறான் فَمَا حَصَدْتُمْ فَذَرُوهُ فِي سُنْبُلِهِ (القرآن)

நீங்கள் அறுவடை செய்யும் விளைச்சல்களில் நீங்கள் புசிப்பதற்கு வேண்டிய ஒரு சொற்ப அளவைத்தவிர மற்ற அனைத்தையும் அதன் கதிர்களிலேயே விட்டு வையுங்கள் *அல்குர்ஆன்*

*12 47, 48, 49 வசனங்கள்*

எதிர்வரும் ஏழு பஞ்ச ஆண்டுகளை எப்படி சமாளிப்பது என்ற அறிவுரையை அற உரையை ஹஜ்ரத் யூசுஃப் அலைஹிஸ்ஸலாம் சொன்னார்கள். எந்த விவசாய கல்லூரிக்கும் சென்று பாடம் படித்திடாத ஹஜ்ரத் யூசுஃப் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு, இக்கல்வியை அல்லாஹ் வழங்கினான்.

மேலும் யூசுஃப் அவர்கள் நாட்டு மன்னரிடம் சொன்னார்கள்.

اجعلني على خزائن الأرض إني حفيظ عليم

தேசியக்களஞ்சியங்களின் நிர்வாகியாக என்னை ஆக்கிவிடுங்கள். நான் அவற்றை பாதுகாக்க நன்கறிந்தவன். *அல்குர்ஆன் 12:55*

ஓராண்டுக்குப் பிறகு அந்நாட்டு மன்னர் ஹஜ்ரத் யூசுஃப் (அலை) அவர்களை மன்னராக்கிவிட்டார். மேலும் தனது மந்திரி அஸீஸ் உடைய மனைவி சுலைகாவை அஸீஸின் மரணத்திற்கு பிறகு ஹஜ்ரத் யூசுஃப் (அலை) அவர்களுக்கு பதவி நீங்கிய மன்னர் நிக்காஹ் செய்து வைத்தார்.

*நூல் : நூருல் இர்ஃபான் தஃப்ஸீர் பக்கம் 385*

மேலே கூறப்பட்ட 12:55 வது ஆயத்திலிருந்து ஹஜ்ரத் யூசுஃப் (அலை) அவர்களுக்கு மார்க்கக் கல்வியும் உலகக்கல்வியும் தெரியும் என்பது தெரிகிறது. இத்தனைக்கும் அவர்கள் நிர்வாகம் தொடர்பாக எந்த I.A.S. ம் படிக்கவில்லை. காண்போரை தண்டி ஈர்க்கும் கட்டழகுப் பெட்டகம் ஹஜ்ரத் யூசுஃப் நபி அவர்களின் அறிவு விவசாயத்திலும் நாட்டு நிர்வாகத்திலும் ஊடுருவிச் செல்லும்போது நபிமார்களின் தலைவர் ஹஜ்ரத் முஹம்மத் (ஸல்-ம்) அவர்களுக்கு ஈச்ச மரத்தைப்பற்றிய ஞானம் இல்லாமலாபோகும்?

ஹஜ்ரத் யூசுஃப் (அலை) அவர்கள் உட்பட எல்லா நபிமார்களின் கல்வி அனைத்தும், அண்ணல் நபி அவர்களின் கல்வி எனும் கடலில் ஒரு சிறு துளிதான் என்பதை நாம் என்றும் நினைவில் வைக்கவேண்டும்.

மிஷ்காத் ஷரீஃபின் புகழ் பெற்ற விரிவுரையாளர் அல்லாமா முல்லா அலீ காரீ (ரஹ்) அவர்கள், ஷரஹ் ஷிஃபா எனும் நூலில் 2ம் வால்யூமில் 238 வது பக்கத்தில் சொல்கிறார்கள்.

وَلَوْ ثَبَتُوا عَلَى كَلَامِهِ لَفَازُوا الْفَنّ

وَلَا زَالَ عَنْهُمْ كُلْفَةُ الْمُعَالَجَة

அன்ஸாரி ஸஹாபிகள் அண்ணல் நபியின் சொல்படி தொடர்ந்து செயல்பட்டிருப்பின் விவசாயக்கலையில் மிகப் பெரும் வெற்றி அடைந்திருப்பார்கள். ஆண் பாளையை பெண் பாளையயின் மீது வைத்திடும் சிரமத்தைவிட்டும் விடை பெற்றிருப்பார்கள்.

மார்க்கக் கல்லூரிகளில் கல்வி கற்ற மௌலவிகளுக்கு மார்க்கம் மட்டும்தான் தெரியும். உலகக்கலை தெரியாது. ஆனால் நபிமார்களுக்கு மார்க்கக் கல்வியும் தெரியும் உலகக் கல்வியும் தெரியும். இதுதான் நபிமார்களுக்கும் மௌலவிகளுக்கும் வித்தியாசம். உத்தம நபி (ஸல்-ம்) அவர்களின் ஹதீஸ் இரண்டு வகைப்படும் 1 வஹீ. 2 அபிப்பிராயம். அவர்களின் வஹீ உத்தரவை ஏற்றுக்கொள்வது கட்டாயமாகும் ஆலோசனை எனும் அபிப்பிராயத்தை ஏற்றுக்கொள்வது முஸ்தஹப்பாகும். ஏற்றுக்கொள்ளாதிருப் பதற்கும் நமக்கு உரிமை உண்டு. ஆனால் அண்ணல் நபியின் அபிப்பிராயத்தை தீயதாகவோ அல்லது கேவலமாகவோ ஒருவன் கருதினால் அவன் காஃபிராகிவிடுவான். இதுதான் அஹ்லுஸ் ஸுன்னத்வல் ஜமாஅத்தின் கொள்கையாகும். *ஆதாரம் : மிர்ஆத் ஷரஹ் மிஷ்காத்*

*பாகம் -1, பக்கம் -152,*

*ஆசிரியர் - அல்லாமா அஹ்மத்யார்கான் (ரஹ்) அவர்கள்.*

**எச்சரிக்கை : ஆரம்பத்தில் நாம் சொன்ன ஹதீஸின் கடைசியில் நான் ஒரு மனிதர்தான் என்று நபிகள் நாயகம் அவர்கள் சொன்னது. அவர்களின் மிகப்பெரும் பணிவையும் உயர்வையும் காட்டுகிறது.**

ஹஜ்ரத் நபிகள் நாயகம் அவர்களை ஒரு மனிதன், கேவலப் படுத்தும் எண்ணத்திலோ அல்லது தனக்கு சமமாக்கும் எண்ணத்திலோ அவர்களை நம்மைப்போன்ற மனிதர் , என்று சொன்னால் அவன் காஃபிராகுவான்.

ஷைத்தான், ஹஜ்ரத் ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களை மனிதன் என்று சொல்லி கேவலப்படுத்தியே காஃபிரானான். இதை அல்லாஹ் சொல்கிறான். لَمْ اَكُنْ لِاَسْجُدَ لِبَشَرٍ خَلَقْتَهُ

நீ படைத்த மனிதனுக்கு நான் ஸஜ்தா செய்வதற்கில்லை என்று இப்லீசு சொன்னான். *அல்குர்ஆன் 15:33*

படைப்புகளில் நபியை மனிதன் என்று சொன்ன முதல் ஆள் ஷைத்தான்தான் என்பதை இந்த வசனம் சொல்கிறது. ஷைத்தான், பாவா ஆதம் (அலை) அவர்களின் உடலை மட்டும்தான் பார்த்தான். அவர்களின் நூரையோ ரூஹையோ பார்க்கவில்லை. எனவே எவனது பார்வை நபிமார்களின் வெளித்தோற்றத்தை - பஷரிய்யத்தை (மனிதத்தன்மை என்பதை) மாத்திரம் பார்க்குமோ அவனது முடிவும் ஷைத்தானின் முடிவைப் போலவே ஆகும்.

ஹஜ்ரத் யூனுஸ் அலைஹிஸ்ஸலாம் அவர்கள்,

لااله الا انـــت ســـبحانك اني كنـــت مـــن الظـــالمين

இறைவா உனையன்றி வணங்கத்தகு இறைவன் யாருமில்லை. உனை துதி செய்கிறேன் . நிச்சயமாக நான் அநியாயக்காரர்களில் உள்ளேன். என்று ஆழக்கடல் மீன் வயிற்றுக்குள்ளிருந்து கூறினார்கள். அதுபோல் ஹஜ்ரத் ஆதம் (அலை) அவர்கள்

ربنا ظلمنــــا انفســـنا وان لم تغفرلنا وترحمنـــا لنكـــونن مـــن الخاســـرين

இறைவா எங்களுக்கு நாங்களே அநீதி இழைத்தோம். என்று சொன்னார்கள்.

மேற்கூறப்பட்ட இரு வசனத்திலும் ஹஜ்ரத் யூனுஸ், ஹஜ்ரத் ஆதம் (அலை) இருவரும் தங்களை அநியாயக்காரன் என்று இறைவனிடம் பணிவுபடுத்துகிறார்கள். தன்னை அவ்வாறு சொல்லிக்கொள்ள அவர்களுக்கு உரிமை உண்டு. அவர்களை அநியாயக்காரர்கள் என்று நாம் சொல்வதற்கு நமக்கு உரிமை இல்லை. அப்படி ஒருவன் சொன்னால் அவன் காஃபிராவான்.

நாட்டு மன்னர் அல்லது முதலமைச்சர் மக்களைப் பார்த்து நான் உங்களைப்போன்ற மனிதன், என்று சொல்லலாம். ஆனால் மக்கள் அவரைப் பார்த்து நீங்கள் எங்களைப் போன்ற மனிதர்தான் என்று எப்படி சொல்ல முடியாதோ, அதுபோல் அண்ணல் நபிகள் நாயகம் அவர்களை நம்மைப் போன்ற மனிதர் என்று நாம் சொல்லலாகாது. அல்லாஹ் காப்பானாக ஆமீன்.

நபிகள் நாயகம் அவர்கள் மனிதர்தாம். ஆனால் நம்மைப்போன்ற மனிதரில்லை. கல்லெல்லாம் மாணிக்கக்கல்லாகுமா?

முற்றும்.

**முஹம்மது காஸிம் மஹ்ளரி**

14.2006 ல் இக்கட்டுரை எழுதி முடிக்கப்பட்டது.

அச்சிட்டோர்

**அல் ஹமீத் கிராஃபிக்ஸ்,**

**செய்யது பள்ளித் தெரு, நாகூர் ஷரீஃப்**

**செல் - 98436 38576, 99439 29582.**